செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 17 நாள்: 10/1/18

ந.க.தே2/312/17

மாவட்ட ஆட்சித் தலைவர்அலுவலகம்,
வேலூர்-9
நாள்:10.01.2018

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் (டாஸ்மாக்) கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அனைத்து அரசு டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடைகள் மதுபான கடைகளை ஒட்டி உள்ள மதுபான பார்கள் மற்றும் நட்சத்திர அந்தஸ்து ஓட்டலில் உள்ள பார்கள் ஆகியவைகள் அனைத்தும் 15.01.2018 திங்கட் கிழமை அன்று திருவள்ளுவர் தினம் என்பதாலும், மற்றும் 26.01.2018 அன்று வெள்ளிக்கிழமை குடியரசு தினம் என்பதாலும்,அன்றைய தினத்தில் முடிவைக்க வேண்டும் என்று அரசு ஆணை எண்.50 உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (VIII) துறை நாள்:29.10.2012 -ல் உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி தினத்தில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடைகள் மதுபான கடைகளை ஒட்டி உள்ள மதுக்கூடங்கள் மற்றும் நட்சத்திர அந்தஸ்து ஒட்டல்களில் உள்ள பார்கள் அனைத்தும் முடப்பட்டு இருக்க வேண்டும் என்றும் அன்றைய தினத்தில் மதுபானங்களை விற்பனை செய்யக்கூடாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி நாளில் மதுபானம் விற்பனை செய்வதாக தெரியவந்தால், சம்மந்தப்பட்ட டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடைகளின் மேற்பார்வையாளர்கள், விற்பனையாளாகள் மீது உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், அதே போல் அன்றையதினம் டாஸ்மாக் மதுபான கூடங்கள் திறக்கப்பட்டிருந்தாலும் மதுக்கூடத்தில் மதுபானம் விற்பனை செய்வதாக தெரியவந்தாலும் மதுபான பார் உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மற்றும் உரிமங்களை இரத்து செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், மதுக்கூட உரிமதாரர்கள் மீது உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

10/1/18.
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.